

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், புள்ளான்விடுதி அரசு உயர்நிலைப் பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின்கீழ், கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்து, கர்ப்பிணிபெண்களுக்குஊட்டச்சத்துபெட்டகங்களைவழங்கினார். உடன்அறந்தாங்கிமாவட்டசுகாதாரஅலுவலர்மரு.விஜயகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்ட துணை செயலாளர் ஜே.ரவிகுமாரின் தந்தை கழக மூத்த முன்னோடி மறைந்த என்.பி.ஜம்புலிங்கம் அவர்களின் திருவுருப் படத்திற்கு கழக துணை பொதுச்செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, கழக நிர்வாகிகளுடன் ரவிகுமார் அவர்களின் இல்லம் சென்று அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு இரங்கலை தெரிவித்தார்.

### தந்தை பெரியார் குறித்து அவதூறுப் பேச்சு!

# சீமான் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## காவல் துறையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா புகார் மனு!



சென்னை, ஜன. 13-

தந்தை பெரியார் குறித்து அவதூறு பரப்பும் விதத்தில் அருவருக்கத்தக்க வகையில் பேசிய நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி புதுச்சேரி மாநில திமுக சார்பில் அதன் அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் தலைமையில் திமுக நிர்வாகிகள் புதுச்சேரி காவல் முதுநிலை கண்காணிப்பாளர் கலைவாணன் அவர்களை நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: -

கடந்த 08.01.2025 அன்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், வடலூர் செய்தியாளர்கள் சந்திப்பின் போது "உனக்கு உடல் இச்சை வந்தால் பெற்ற தாயோ, மகளோ, அக்காவோ, தங்கச்சியோ அவர்களோடு உடல் உறவை வெச்சிக்கிட்டு சந்தோசமா இரு என்று பெரியார் பேசியிருக்கார். இதற்கு என்ன பதில் சொல்ற?" என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லாத வார்த்தைகளை அவர் சொல்லியிருக்கிறார் என்று இழிவாகவும் அறுவருக்கத்தக்க வார்த்தைகளையும் சொல்லி பொதுவெளியில் பேசியிருக்கிறார். இது அனைத்து காட்சி ஊடகங்களிலும் பதிவாகியுள்ளது. மேலும், சீமான் 'பிரபாகரனை சந்திக்கும் வரை நானும் திராவிடர் எனும் திருடர் கூட்டத்தில் தான் இருந்தேன்' என்று திராவிடர்களை திருடர்கள் என்று இழிவாக பேசியது மட்டுமல்லாமல் அமைதியான புதுச்சேரியில் கலவரத்தை தூண்டும் வகையில் மீண்டும் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் தரங்கெட்ட வகையில் பேசியுள்ளார்.

தந்தை பெரியார் பேசியதாக சீமான் குறிப்பிட்டு பேசிய அனைத்தும் ஆதாரமற்ற பொய். பெரியார் எந்த ஒரு இடத்திலும் அப்படி பேசியதோ எழுதியதோ இல்லை என்பதற்கு எங்களிடம் ஆதாரம் உள்ளது. நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், தனது அரசியல் சுயலாபத்திற்காக மலிவான அரசியலை செய்து பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வண்ணம் செயல்படுகிறார். பெண்ணுரிமை போராளியான எங்கள் திராவிட கொள்கைகளுக்கு வித்திட்ட தந்தை பெரியார் அவர்கள் மீது சீமான் போன்றோர் இழிவுபடுத்தி பேசுவதை ஒருநாளும் ஏற்கமாட்டோம். சீமானின் இத்தகைய பேச்சு எங்கள் கழக உடன்பிறப்புகள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழினத் தலைவர் தந்தை பெரியார் அவர்களை அவமதிப்பது ஒட்டு மொத்த தமிழர்களை அவமதிப்பதாகும். தந்தை பெரியாரின் கொள்கைகளை பின்பற்றி தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ராமச்சந்திரன், செல்வி. ஜெயலலிதா மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வரை ஐம்பெரும் முதலமைச்சர்களுக்கு வழிகாட்டியான பெரியாரை இழிவு செய்த சீமான் மீது சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தமிழகத்தில் அவர் அநாகரியமாக பேசியது குறித்து பல்வேறு புகார்கள் கொடுக்கப்பட்டும், நீதி மன்றம் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்யவும் உத்தரவிட்டுள்ளது. அதே நிலையில் புதுச்சேரியில் அவர் மீது அவதூறு பேச்சு கலவரத்தை தூண்டுதல், பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தல், தமிழினத் தலைவரை இழிவாக பேசி எங்கள் கட்சியையும், தலைவரையும் கொச்சைப் படுத்தி பேசி பல கோடி தொண்டர்களின் மனதை புண்படுத்திய சீமான் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் உரிய சட்ட நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது, திமுக அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

### நெய்வேலி - மாளிகம்பட்டி ஊராட்சியில்

# ஆதிதிராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்டப்படுமா?

## சட்டப்பேரவையில் நெய்வேலி சபா.இராஜேந்திரன் கேள்வி!



சென்னை, ஜன. 13-

சட்டப்பேரவையில் நெய்வேலி தொகுதி உறுப்பினர் சபா.இராஜேந்திரன், நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சி மாளிகம்பட்டு ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டப்படுமா என்று கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பாக பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**சபா. இராசேந்திரன்:** நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சி, மாளிகம்பட்டு ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் மா.மதி வேந்தன்:** கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு கிராமத்தில் 450 ஆதி திராவிடர் குடும்பங்கள் உள்ளன. இந்த கிராமத்தைச் சுற்றியுள்ள தாழம்பட்டு, மணிக்கன்குப்பம் ஆகிய கிராமங்களில் 250-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட குடும்பங்கள் வசிக்கின்றனர். மேலும், மாளிகம்பட்டு வருவாய் கிராமத்தில் புல எண் 276/2-ல் ஆதி திராவிடர் நலத் துறைக்கு சொந்தமான நத்தம் இடம் உள்ளது. இந்த இடத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு துறையின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக, உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சபா. இராசேந்திரன்:** முதல்வர் அவர்கள் ஆட்சியில் ஆதி திராவிடர்களுக்குத் தேவையான திட்டங்களை யும், சலுகைகளையும் வழங்கிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ் நிலையில், மாளிகம்பட்டு ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, மாளிகம்பட்டு கிராமம் புல எண் 276/2-ல் 20 சென்ட் நிலம் ஆதி திராவிடர் நத்தம் கணக்கிலேயே உள்ளது. எனவே, தேவையான நிதியை மட்டும் பெற்று, சமுதாயக் கூடத்தை உடனடியாக கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமாய் அமைச்சர் அவர்களை தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் மா. மதிவேந்தன்:** ஒரு சமுதாயக் கூடம் கட்ட வேண்டுமென்றால், ஒரு சில நிபந்தனைகள் உள்ளன. ஒரு பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 5,000 மக்கள்தொகை அல்லது 1,000 குடும்பங்கள் இருக்க வேண்டும்.

இதில் பெரும்பாலான மக்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களாக இருக்க வேண்டும். மேலும் 5 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வேறு எந்த சமுதாய கூடமும் இருக்கக் கூடாது. சமுதாய கூடம் கட்டுவதற்கு குறைந்தபட்சம் 10,000 சதுர அடி நிலம் கிராம ஊராட்சிக்கு சொந்தமானதாகவோ அல்லது வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலமாகவோ இருக்க வேண்டும். மேற்கண்ட வழிகாட்டுதல்களை நிறைவு செய்யும்பட்சத்தில் துறையினுடைய நிதி நிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சபா.இராசேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற அனைத்து நிபந்தனைகளையும் இந்த மாளிகம்பட்டு ஊராட்சி நிறைவு செய்திருக்கிறது. எனவே, போதுமான நிதியைப் பெற்று அதை விரைவாக அந்த சமுதாய கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, அதே போல, பெருகிவரும் மக்கள்தொகை காரணமாகவும், தலைமுறைகள் தாண்டி அதே பகுதியில் வசித்து வருகிற மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்கவும், வீட்டு மனைகள் பொதுவாக தேவைப்படுகிறது. எனவே, புதிய பகுதிகளை, நிலங்களை ஆர்ஜிதம் செய்து ஆதி திராவிடர்களுக்கு தேவையான புதிய வீட்டு மனைகளை பெற்றுத் தருவதற்கு துறையின் சார்பில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் மா. மதிவேந்தன்:** கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆதி திராவிடர் மக்களுக்கு கிட்டத்தட்ட 14,115 house site pattaகள், வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 11,138 பயனாளிகளுக்கு வரன்முறைப்படுத்தி, அதாவது, regularization செய்த பிறகு epatta வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,977 ஆதி திராவிடர் மக்களுக்கு epatta வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிதாக வீட்டுமனைப் பட்டா கோருவோருக்கு நில எடுப்பு செய்த பிறகு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### செஞ்சி ஒன்றிய தி.மு.க.சார்பில்

# சமத்துவப் பொங்கல் விழா நல உதவிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்

செஞ்சி, ஜன.13-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றிய தி.மு.க. சார்பில்தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நரசிங்க ராயன் பேட்டை ஊராட்சி எம்.ஜி.ஆர் நகர் மாரியம்மன் கோவில் வளாகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது

.நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி செயலாளர் சிவக்குமார் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சத்துவ பொங்கல் விழாவை துவக்கி வைத்தது பொதுமக்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார்.

இதில்செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜய ராகவன்,மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மகளிர் அணி சைத்தானி பீமஸ்தான் ,அனந்தபுரம் நகர அவைத் தலைவர் டாக்டர் கல்யாண் குமார், அனந்தபுரம் நகர மன்ற தலைவர் முருகன், என்.ஆர். பேட்டைஊராட்சி மன்ற தலைவர் பிலால் முன்னால் ஊராட்சி மன்ற தலைவர்கள் காசியம்மாள் ஏழுமலை, பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் கலைவாணி சிலம்பரசன், முன்னால் துணை தலைவர் ராமு நிர்வாகிகள் கருணாநிதி, கவுன்சிலர் சிவக்குமார்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்ட பிரதநிதிகள் அய்யாதுரை, கதிரவன், இளைஞர் அணி அமைப்பாளர் ஐம்போதி பழனி துணை அமைப்பாளர் செஞ்சி பழனி, தஞ்சம் பட்டு செந்தில், அறிவழகன், குப்பன், லிங்காநந்தன் முனியன், பிரசாந் ராமன், நரசிம்பன், கமிட்டி ஆனந்தன், சிவா சங்கர், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



கோவை பீளமேடுபுதூரில், நடைபெற்ற பீளமேடு பகுதிக் கழகம் 1 செயலாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தந்தையும் முன்னாள் மாவட்ட கழக துணைச் செயலாளருமான துரை தேவராசன் அவர்களின் 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில்,கழக சொத்து பாதுகாப்பு குழுத் துணை தலைவரும் முன்னாள் அமைச்சருமான பொங்கலூர் . நா.பழனிச்சாமி கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டல தலைவர் இளஞ்செல்வி கார்த்திக் மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர் ஆகியோர் அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் வே. பாலசுப்ரமணியம், பொதுக்குழு உறுப்பினர் இரா. மணிகண்டன், பகுதி கழக செயலாளர்கள் எஸ். எம். சாமி, ப. பசுபதி, வட்ட கழக செயலாளர் கி. நாராயணன், க. மணிகண்டன், மாமன்ற உறுப்பினர்கள் அம்பிகா தனபால், சித்ரா வெள்ளிங்கிரி, பகுதி கழக நிர்வாகிகள் சுப்பிரமணியம், பந்தல் ரவி, துரைசாமி, லக்ஷ்மி, டி. எம். மணி, சின்னசாமி, கஸ்தூரி அருண், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா. தனபால், மாவட்ட துணை அமைப்பாளர்கள் க. மணிகண்டன், எஸ். எம். எஸ். சுதாகரன், இரா.வாசுதேவன், லாரா பிரேம்தேவ், கழக முன்னோடிகள், உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன். தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன். எம். சிவானந்தம், ப.விசாலாட்சி, எஸ்.இரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எல்.இராஜேந்திரன். பகுதிச் செயலாளர்கள் செல்வராஜ். கல்யாணசுந்தரம், கிருஷ்ணமூர்த்தி, கண்ணன், மண்டல குழு உறுப்பினர்கள் பாபு (ஏ) நரசிம்மன், கேஎன்.ஆசைத்தம்பி, மனோகரன், உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ரயில் மறியல் போராட்ட வழக்கு:

# தி.மு.க., எம்.எல்.ஏ.- எம்.பி. விடுவிப்பு!

## விழுப்புரம் நீதிபதி உத்தரவு

கள்ளக்குறிச்சி, ஜன. 13-

கள்ளக்குறிச்சி அருகே நடந்த ரயில் மறியல் போராட்டம் தொடர்பான வழக்கில், தி.மு.க., எம்.எல்.ஏ., வசந்தம் க.கார்த்திகேயன், தே.மலையரசன் எம்.பி., ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்க மத்திய அரசை வலியுறுத்தி, தமிழகத்தில் கடந்த 2018ம் ஆண்டு போராட்டம் நடந்தது. கள்ளக்குறிச்சி அடுத்த புக்கிரவாரி ரயில் நிலையம் அருகே ஈயனூரில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி எம்.எல்.ஏ., வசந்தம் க.கார்த்திகேயன், கள்ளக்குறிச்சி எம்.பி., தே.மலையரசன் தலைமையில், 'தி.மு.க.,வினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, காரைக்காலிலிருந்து பெங்களூரு நோக்கி சென்ற ரயிலை மறித்து போராட்டம் செய்தனர். இதனால் அந்த ரயில், தாமதமாக புறப்பட்டு சென்றதால் பயணிகள் அவதிப்பட்டனர்.

இது தொடர்பாக, வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மலையரசன் எம்.பி., உள்ளிட்ட 5 பேர் மீது, சின்னசேலம் ரயில்வே போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை, விழுப்புரம் முதலாவது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ராதிகா,இந்த வழக்கில், அரசு தரப்பில் போதிய சாட்சியம் இல்லாததால், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தே.மலையரசன் எம்.பி. உள்ளிட்ட 3 பேரையும் விடுதலை செய்து நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தெற்கு ஒன்றியம் ஜி.அரியூர் கிராமத்தில் நடைபெற்ற பொங்கல் பரிசு பொருட்கள் வழங்கும் விழாவில் தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் மற்றும் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர், தொகுதி பொறுப்பாளர் ச.அ.பெருநற் கிள்ளி ஆகியோர் கலந்து கொண்டு 1500 கழக நிர்வாகிகளுக்கு வழங்கினார்கள். இதில் திருக்கோவிலூர் தெற்கு ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பொங்கல் பரிசு தொகுப்பை நாகை மாவட்டத்தில் உள்ள 386 ரேஷன் கடை வாயிலாக 2,17,631 குடும்ப அட்டைகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பை நாகை மாவட்டம் நாகையில் உள்ள ரேஷன் கடையில் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் வழங்கி தொடங்கி வைத்தார் உடன் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ் தாட்கோ தலைவர் உ.மதிவாணன் நகர கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து.எம். ஆர்.செந்தில்குமார். நகர் மன்ற உறுப்பினர்கள் ஆர். ஏ.டி.அண்ணாதுரை, சத்தியவாணி கணேசன் மற்றும் பலர் உள்ளனர்.